# திரைமொழியில் மீண்டும் மீண்டும் புனைகதையில் கண்டுபிடிப்புகளும் புதுமைகளும்

*டே. ஜினி*
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி

*முனைவர். ஜே. பிறீடா மேபல் ராணி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்
மனோான் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
அபிஷேகப்பட்டி திருநெல்வேலி
https://doi.org/10.5281/zenodo.15307905

## முன்னுரை

ஓவியத்தையும் புகைப்படத்தையும் அசைய வைக்கும் அறிவியல் கண்டுபிடிப்பின் அடிப்படையாகப் பிறந்தது திரைப்படமாகும். பல்வேறு தொடர் முயற்சியின் பயனாகப் பெற்ற திரைப்படம் இன்று மிகச் சிறந்த கருத்துப் பரிமாற்ற ஊடகமாக விளங்குகிறது. புனைகதை இலக்கியங்களைக் கொண்டு திரைப்படங்கள் இயங்குவது அன்றும், இன்றும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. 1984 ஆம் ஆண்டு அனுராதா ரமணன் எழுதிய மீண்டும் மீண்டும் என்ற புனைகதையினைத் தழுவி கே. பாலச்சந்தர் என்ற இயக்குநர் 1990 இல் ஒரு வீடு இரு வாசல் திரைப்படமாக எடுத்தார். திரைமொழியில் இப்புனைகதை மூலம் செய்த புதுமைகளை ஆராய்வதே இக்கட்டுரையன் நோக்கமாகும்.

## திரை மொழி

திரைப்படத்திற்கு என்று ஒரு மொழி இருக்கிறது. அதனைத் திரைமொழி எனக் குறிப்பிடலாம். திரைப்படத்தில் வசனம் இன்றி காட்சிகளை அடுத்தடுத்து வைப்பதன் மூலம் கதை சொல்வார்கள். ஒருவன் ஓடி வருவதைக் காட்டிவிட்டு அதைப் பார்ப்பவன் ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள் என்று கேட்க வேண்டியதில்லை என்னாச்சு? என்று கேட்டால் போதும் இது காட்சிமொழியின் தன்மை.

## புனைகதை

புனைகதை என்னும் கலைச்சொல், கற்பனைக் கதைகளான நாவல், குறு நாவல், சிறுகதை ஆகியவைகளைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல் என்று டாக்டர். சு. வேங்கடராமன் தன்னுடைய புனைகதை இலக்கியத்தில் குறிப்பிடுகிறார். புனைகதை அல்லது புனைவு என்பது உண்மை அல்லாத கதைகளைக் குறிக்கும். அதாவது இக்கதைகள் கற்பனையாக உருவாக்கப்படுபவை எனினும், புனைகதைகள் முழுமையாகவே கற்பனையாக இருக்க வேண்டும் என்பதில்லை. இக்கதைகளில் உண்மையான மனிதர்கள், இடங்கள், நிகழ்வுகள் என்பன இடம்பெறுவதுண்டு. எல்லாப் புனைகதைகளும் கலைத்துவம் கொண்டவையாக இருப்பதில்லை. எனினும் புனைகதை ஒரு கலை வடிவமாக அல்லது பொழுதுபோக்கு வடிவமாகவே பார்க்கப்படுகின்றது.

**கண்டுபிடிப்புகளும் புதுமைகளும்**

எழுத்தாளன் என்பவன் தன்னுடைய படைப்புகளில் புதிய புதிய கண்டு பிடிப்புகளையும், மாற்றங்களையும் கொண்டு வர வேண்டும். அப்படைப்பு எதுவாக இருந்தாலும் சரி மக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெறுவதாக அமைய வேண்டும். இதனையே, எழுத்தாளர்கள் தங்கள் பேனாவை எப்பேர்ப்பட்ட மையில் தொட்டு எழுதுகிறார்கள் என்பதைக் கேட்டால், நீங்கள் ரொம்பவும் வியப்படைவீர்கள். சிலர், பெரு''மை'' யில் தொட்டு எழுதுகிறார்கள்.

சிலர்தற்பெரு''மை'' யில் தொட்டுஎழுதுகிறார்கள். மேலும் சிலர் பொய்''மை'', பழ''மை'', கய''மை'', அறியா''மை'' போன்ற மைகளில் தொட்டு எழுதுகிறார்கள்.

நல்ல எழுத்தாளன், புது''மை'', உண்''மை'', பொறு''மை'', வறு''மை'', பெரு''மை'', உரி''மை'', கட''மை'' ஆகிய மைகளில் தொட்டு எழுதுகிறான். என்று கலைவாணர் அவர்கள் தனது கருத்துரையில் கூறியுள்ளார்.

**திருமணம்**

நாம் திரைப்படங்களில் திருமணக் காட்சிகளைக் காண்பதுண்டு. திருமணம் முடிந்தவுடன் மணப்பெண் சொம்பில் பால் கொண்டு வருவதும், கட்டில் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் இப்படி பல சடங்குகள் காட்டப்பட்டிருக்கும். மகேந்திரன் இயக்கிய உதிரிப்பூக்கள், நண்டு, முள்ளும் மலரும் ஆகிய திரைப்படங்களில் திருமணக் காட்சிகள் மிக எதார்த்தமாக காட்சிப்படுத்தப் பட்டிருக்கும். அவைகளைக் காணும் போது தமிழ் பண்பாட்டுக் கூறுகளை அடையாளம் காண்பதாக அமையும்.

ஒருவீடு இருவாசலில்வரும்யமுனாவுக்கும், சுகுமாருக்கும் திருமணம் முடிகிறது. கட்டிலில் பூ இல்ல, ஊதுபத்தி இல்ல, கையில் சொம்பு இல்ல, பாலும் இல்ல, உங்க காலில் விழுந்து நமஸ்காரமும் பண்ணல. ஆமாம் இந்த சடங்கொன்னும் வேண்டாமுண்ணு அம்மா கிட்ட சொல்லிட்டேன். இதில எல்லாம் எனக்கு விருப்பமில்லை இங்கு பெண் என்பவள் தன் திருமணச்சடங்கில் அவளுக்கு விருப்பமான முடிவை எடுக்கும் ஒரு சுதந்திரத் தன்மையைக் காட்டியிருக்கிறார் இயக்குநர் பாலசந்தர்.

**நகைச்சுவை**

நாடகக் கலையிலிருந்து தோன்றியதுதான் திரைப்படம். இக்கலையானது நவரசம் என்னும் அவையங்களினால் அமைக்கப்பட்டிருக்கும். இந்த நவரசங்களில் முதன்மையான இடத்தைப் பெறுவது நகைச்சுவை தான். இது எப்பேர்பட்ட மனிதனையும், எப்பேர்பட்ட சந்தர்ப்பத்திலும் சிறிது நேரமாவது துன்பங்களை எல்லாம் மறக்கடித்து மனதை தன்வசமாக்கும் சக்தி வாய்ந்ததாக இருக்கின்றது.

சுகுமாரின் பங்களாவின்பக்கம் ஒரு குடிசையில் குடியிருப்பவள் தான் செண்பகம். அவள் ஒரு சேரி சமூகத்தைச் சார்ந்தவள். சுகுமாருக்கு ஒரு பால் காரியாகவே அறிமுகமாவாள். ஐயா பால் வேணுங்களா? வேண்டாம்மா. பால் பவுடர் இருக்குது. அதுல கலப்படம் இருக்கும் உடம்பு கெட்டுப் போயிடும். நீ கொண்டுவந்த பாலுல கலப்படம் இல்லேண்ணு எப்படி நம்புறது. மாட்டுடன் வந்து பால் கறந்து கொடுக்கேண்ணு சொல்லுவாள். அன்று முதல் எல்லா நாளும் பசுமாட்டை ஒட்டிக்கிட்டு வந்து பால் கறந்து கொடுப்பாள். இக்காட்சியைப் பார்க்கும் போது வேடிக்கையாக இருக்கும். நகைச்சுவை மூலம் கலப்படம் என்ற கருத்தை நம் மனதில் பதிய வைத்துவிடுகிறார்.

**பெண்ணியம்**

சமுதாயம் ஆணுக்கு நிகராக அமைந்துள்ள பெண்ணினத்தை அடிமையாக வைத்துள்ளது. சங்க காலம் தொட்டு இன்று வரை சிக்கல்கள் பெண்களுக்கு உரியனவாக உள்ளன. அச்சிக்கல்கள் பெரும்பாலும் ஆண்களால் தான் தோற்றம் பெறுகின்றன. இருப்பினும் நெடுங்காலமாகவே வலியுறுத்தப்படும் மதிப்புகளில் ''பெண்ணிய நோக்கு'' இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது.

அவற்றின் எதிரொலியாகத் தான் கவிஞர்கள் பெண்கள் நிலையினைத் தமது பாடல்களில் பாடி காட்டுகின்றனர்.

***கண்டால் கொல்லும் விஷமாம்***
***கட்டழகு மங்கையரை -நாம்***
***கொண்டாடித் திரியாமல்***
***குருடாவது எக்காலம்***

***- உடுமலை நாராயண கவி***
***(தூக்குத் தூக்கித் திரைப்படம்)***

*திரைமொழியில் சுகுமார் தன் மனைவி யமுனாவிடம் நீ இந்த மாதிரி டிரெஸ் போடக்கூடாது. இந்த ட்ரெஸ்ல ஏதாவது ஆபாசமா இருக்கா? இல்லை. அப்ப ஏன்? இல்லை என் பிரெண்ஸ்களின் முன்னாடி நீ இந்த டிரெஸ் போடக்கூடாது. அவங்க ஒரு மாதிரி பார்க்கிறாங்க. அப்போ நீங்களும் நல்ல பிரெண்ஸ்களை கூட்டிட்டு வாங்க.*

*யமுனா நீ என்ன எழுதிட்டு இருக்க. கதை எழுதிட்டு இருக்கேன். பொம்பளைங்களுக்கு என்ன எழுத்து வேண்டி கிடக்கு. அதென்ன ஒரு பிற்போக்கான எண்ணம் உங்களுக்கு. கதை எழுதிதான் பிழைக்கணுங்கிறது இல்ல. நீ கதை எழுத வேண்டாம் எனக்குப் பிடிக்கல என்று கூறி அவள் எழுதிக் கொண்டிருந்த காகிதத்தை கிழித்து எறிவான். எழுத்தாளர் மாநாட்டிற்கும் அவளை விட மாட்டான். ஒரு பெண்ணிற்கு ஆடை சுதந்திரமும், எழுத்து சுதந்திரமும் இன்னும் பல சுதந்திரங்கள் மறுக்கப்படுவதை இப்படைப்பு சுட்டிக்காட்டுகிறது.*

**தாய்மை உணர்வு**

*ஒரு பெண்ணானவள் மகளாக, சகோதரியாக, தாயாக, தாரமாக, தோழியாக, ஆசானாக, இப்படி தன் வாழ்நாளில் எத்தனையோ பாத்திரங்களில் வலம் வந்தாலும் அன்னை என அவள் பூசும் அதிகாரம் அற்புதமானது அழகானது.*

*யமுனா தான் கருவுற்றிருப்பதாக சுகுமாரிடம் சொல்லுவாள் அவனும் முகமலர்ச்சியுடன் எத்தனை மாசம் என்று கேட்பான்.. அவள் 22 நாள் என்பாள் என் பிரெண்ஸ் எல்லாம் எங்கிட்ட பெரிய டாக்டர் ஆகணுமா, சைன்டிஸ்ட் ஆகணுமா, இல்லை எழுத்தாளராகணுமான்னு கேட்டாங்க அதுக்கெல்லாம் நான் தாயாகணும்னு சொல்லுவேன். எல்லாரும் சிரிப்பாங்க. எனக்கு தாய்மை ரொம்ப பிடிக்கும் தேங்க்யூ சுகுமார்.*

*அப்படிக் கூறிய யமுனாவே தன் கணவனிடம் சண்டையிட்டுக் கொண்டு தாய்வீட்டிற்குப் போனபோது செண்பகம் என்ற வேலைக்காரியுடன் தகாத உறவை ஏற்படுத்தி ஒரு குழந்தையையும் கொடுத்திருப்பான். இந்த உண்மை யமுனாவுக்கு தெரிந்ததை நினைத்து செண்பகம் தற்கொலை செய்துவிடுவாள். எனவே தன் வயிற்றில் இருக்கும் கருவினைக் கலைத்து விட்டு செண்பகத்தின் குழந்தையை தன் குழந்தையாக வளர்ப்பாள். சுகுமாரை விவாகரத்தும் செய்து விடுவாள்.*

**குறியீடு**

*ஒரு படைப்பாளன் தனது உள்ளத்து உணர்வுகளை உள்ளபடியே வெளிப்படுத்த இயலாதவாறு புறக்காரணிகள் தடையாகும் நிலையில் அவனுக்கு குறியீடுகள் பெரிதும் உதவுகின்றன.*

*சிலப்பதிகாரத்தில் சிலம்பே. ஒரு குறியீடாக அமைகின்றது கோவலனும், கண்ணகியும் இணைச் சிலம்பாக அமைக்கின்றனர். இதனை கவிஞர்' அஞ்செஞ்சீறடி அணிசிலம் பொழிய எனக் காட்டியுள்ளார். (இளங்கோவின் இலக்கிய உத்திகள்ப:129) ஜான் ஆப்ரஹாம் வெங்கட் சுவாமிநாதனின் அக்ஹாரத்தில் கழுதை என்ற கதையை சிற் சில மாற்றங்களுடன் படமாக்கி இருப்பார் இதில் கழுதை குறையீடாக இருப்பதைக் காணலாம்.*

*ஒருவீடு இருவாசலில் சுகுமார் தன் மனைவி யமுனா இல்லாத நேரத்தில் வேலைக்காரியுடன் உறவு கொள்ளும் காட்சியை ஒரு குறியீடாக் காட்டியுள்ளார். அவர்கள் இருவரும் ஒன்றாக இருக்கும் நேரத்திலெல்லாம் அவன் சட்டை அல்லது ஒரு துண்டினை பிள்ளையார் உருவ பொம்மை பார்க்கக்கூடாது என்று மூடிபோடுவான். மேலும் இதனை வேலைக்காரன் கட்ட பொம்மனும் பார்ப்பான். அவன் அக்காட்சியை சுவரில் ஓவியமாக வரைந்து விடுவான்.*

*இவன் செண்பகத்திடமும், யமுனாவிடமும் வந்து மாறி மாறி பொய் சொல்லும் காட்சிக்கு குறியீடாக பச்சோந்தியைக் காட்டியிருப்பார் இவ்வாறு குறியீடு ஓவியமாகவும், பொருளாகவும், உயிரியாகவும், காட்சியாகவும் இங்கு நிலைநிறுத்தப்படுகிறது.*

**முடிவுரை**

*திரைமொழியில் ஒரு வீடு இரு வாசலில் கே. பாலசுந்தர் புகுத்திய புதுமைகள் திருமணம், குறியீடு, பெண்ணியம், தாய்மை உணர்வு என்ற கூறுகள் வழி ஆராயப்பட்டுள்ளது.*

**பார்வை நூற்கள்**


1. *ஒரு வீடு இரு வாசல் அனுராதா ரமணன் அருணோதயம் பதிப்பகம், முதற் பதிப்பு 1984 3, கௌடியாமடம் இராயப்பேட்டை: சென்னை- 14*
2. *ஒரு வீடு இரு வாசல் திரைப்படம்* Studio plus entertainment *(இணையம்)*
3. *சித்திரம் பேசுதடி தொகுப்பாசிரியர் சு. தியடோர் பாஸ்கரன் தமிழ்த் திரை பற்றிய காலப்பதிவுகள் காலச்சுவடு பதிப்பகம் முதல் பதிப்பு அக்டோபர் 200*
4. *கலைவாணர் மலர் அன்பு நிலைய வெளியீடு பிறஸ் டாஸ்ஸன், டாஸ் பேப்பர் பில்டிங்ஸ், நாகர்கோவில்-1*